



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில், தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 திருநங்கையர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) முகாம் அலுவலகத்தில், காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா.திருநாவுக்கரசு எழுதிய “COMPETITIVE EXAM 15 STRATEGIES” என்ற புத்தகத்தை வெளியிட, காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் பெற்றுக்கொண்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026னை (Tamil Nadu Warehousing Policy) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026னை (Tamil Nadu Circular Economy Investment Policy) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, தூய்மைப் பணியாளர் நலவாரியம் மூலம் பல்வேறு நலத் திட்ட உதவிகள் அறிவித்து செயல்படுத்தி வருவதற்காக தங்களது நன்றி தெரிவித்துக்கொண்டனர். உடன், அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.01.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உயர்த்தப்பட்ட பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000/ மற்றும் தொழிலாளர் சேமநலநிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் முதல் முறையாக பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000/ வழங்கிடும் அடையாளமாக 12 நபர்களுக்கு பொங்கல் கருணைக் கொடைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில், தனியார் துறையில் வேலைவாய்ப்புகளை பெற்றுத்தரும் நோக்குடன் நடத்தப்படும் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 3,00,000 ஆவது நபருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# விருதுநகரில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

*விருதுநகர், ஜன. 14 -*

விருதுநகர் வடக்கு ஒன்றியம், செங்குன்றாபுரம் கிராமத்தில் வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெகன் பால்பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நலத் திட்ட உதவிகள், கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழாவில் தமிழக நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு கலைஞர் நூலகத்தை விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் A.R.R.சீனிவாசன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

மேலும் பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள், கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் கோப்பையை வழங்கினார்கள்.

விருதுநகர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆவுடையம்மாள், விருதுநகர் நகரச் செயலாளர் S.R.S.தனபாலன், விருதுநகர் நகர்மன்ற தலைவர் S.R.S.R.மாதவன், விருதுநகர் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சிதம்பர பாரதி, சேகர், கார்த்திகேயன், அய்யனார், சிவகாசி மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து செல்வம், துணை அமைப்பாளர்கள் சுரேஷ், அருணாச்சலம், பொதுக்குழு உறுப்பினர்கள் சுதாகர், மதியழகன், தொமுச மண்டல பொதுச் செயலாளர் ராஜசெல்வம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் K.G. ராஜகுரு,

அமைப்புசாரா ஓட்டுனர் அணி எல் திருமாறன், நகர துணை செயலாளர்கள் ஏ எஸ் கே ரமேஷ் குமார், அ மரியராசு, அ மரியராசு, நகர இளைஞரணி பாசில், ஏ எஸ் கே ஆர் அஜய் குமார், இஸ்ரேல் பிரசாத், சதீஷ், சோபனா ஜெகன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் திராவிடப் பொங்கல் விளையாட்டுப் போட்டிகள்!

*திருவாரூர், ஜன.14-*

திருவாரூர் மாவட்ட தலைமை விளையாட்டு அரங்கத்தில் மாவட்டம் முவதும் ஒன்றிய, நகர பகுதிகளில் நடைபெற்ற திராவிட பொங்கல் விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கான இறுதிப்போட்டிகள் நடைபெற்றன. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று போட்டிகளை துவக்கி வைத்து ஊக்கப்படுத்தினார்.

வை.செல்வராஜ் எம்.பி.சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என். ராஜா மற்றும் துணை அமைப்பாளர்கள் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தினர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களின்படி மாவட்டம் முழுவதும் நடைபெற்ற திராவிட பொங்கல் விளை யாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் திருவாரூர் மாவட்ட தலைமை விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. கபடி, கோகோ, கைப்பந்து என ஆண், பெண் இருதரப்பினருக்கும் தனித்தனியாகவும் ஆண்களுக்கு கிரிக்கெட் போட்டிகள் என நடைபெற்றன.

மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று தொடங்கிவைத்த இந்த போட்டிகளில் பங்கேற்றோரை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என். ராஜா வரவேற்றார். மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன் னிலை ஏற்றனர்.

போட்டிகளில் பங்கேற்ற வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள், ஆசிரியர்கள், பார்வையாளர்கள் என ஆயிரம் பேருக்கு திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் அறுசுவை உணவுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு போட்டிகளில் வெற்றிபெறும் முதல் மூன்று அணிகளுக்கு தலா ரூ.20000, ரூ.15000,ரூ10000 என பரிசுத்தொகைகளும், வெற்றி கோப்பைகளும், வெற்றி பதக்கங்களும் வழங்கப்பட்டன. முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வீ.ஆர்.என்.பன்னீர் நன்றி கூறினார்.